பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Time Reader
Editorial Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 17 புதன்கிழமை (04-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 314

## முல்லைக் கடலில் பெரும் கடற்சமர்

# டோரா படகும் தரையிறங்கு கலமும்

# புலிகளின் தாக்குதலில் பெரும்சேதம்!

## 15 கடற்படையினர் பலி! 54 பேர் வரை படுகாயம்!!

யாழ்ப்பாணம், ஒக்டோபர் 4

நேற்று முன்தினம் மாலை முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்புலிகளின் கடும் தாக்குதலுக்கு இலக்காகி ஸ்ரீலங்கா கடற்படையின் தரையிறங்கும் கலம் ஒன்றும், டோறா பீரங்கி படகு ஒன்றும் பலத்த சேதத்துக்குள்ளாகின. சுமார் 6 மணி நேரம் தொடர்சியாக நடந்த இந்தப் பெரும் கடற்சமரில் 15 கடற்படையினர் கொல்லப்பட்டனர். 40 இராணுவச் சிப்பாய்களும், 14 கடற்படையினரும் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு ஆரம்பமான இச்சமர் நள்ளிரவு வரை நீடித்ததாக அறிவிக்கப்பட்டது.

இச்சமரில் நளாயினி படையணி, சாள்ஸ் படையணி, கடற் கரும்புலியணி ஆகியவற்றைச் சேர்ந்த கடற்புலிப் போராளிகள் பங்குகொண்டனர். (உ-க 3)

## முல்லைத்தீவு கடற்சமரில் ஐவர் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 4

முல்லைத்தீவு கடற்பரப்பில் நேற்று முந்தினம் டோறாப் படகு மற்றும் தரையிறங்கு கலம் ஆகியவற்றை தீரத்துடன் தாக்கி பெரும் சேதம் விளைவித்த கடற்சமரில் ஐந்து போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இந்த வெற்றிச்சமரில் கடற் கரும் புலிகளான மேஜர் அருமை, கப்டன் தணிகை, நாளாயினி கடற் தாக்குதல் அணித் தளபதி இளநிலா, சாள்ஸ் படையணியைச் சேர்ந்த கப்டன் சஜீபன், லெப்டினன்ட் அமுதன் ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தனர். (ஓ-3)

## வலி. கிழக்கில் கடும் சண்டை

## 150 புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக் 4

வலி கிழக்கில் ''இடிமுழக்கத்தாக்குதல்'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்காப் படையினர் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை ஆரம்பித்ததை அடுத்து அங்கு உக்கிரச் சமர் வெடித்தது.

நேற்றுக் காலைவரை தொடர்ந்த இந்தச் சமரில் நூற்றியம்பது போராளிகள்

[7 ஆம் பக்கம் பார்க்க]

## படைக்கும் பெரும் இழப்பு

## 50 துருப்பு வரை பலி!

வலி. கிழக்கில் ''இடிமுழக்கத் தாக்குதல்'' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் மீது புலிகள் நடத்திய கடும் தாக்குதலில் அரச துருப்புகளுக்கும் பேரிழப்பு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆகக் குறைந்தது ஐம்பது படையினராவது உயிரிழந்தனர் என்பதையும் —

125 இற்கும் குறையாத படையினர் படுகாயம் அடைந்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. திக்கோடையில் இரு பவள்கள் அழிப்பு

### இன்ஸ்பெக்டர், 2 அதிரடிப்படையினர் பலி

கொழும்பு, ஒக். 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக் குடிக்கு மேற்கே சுமார் 11 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள திக்கோடையில் எட்டு பவள் கவஷ வாகனங்கள் சகிதம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட விசேட அதிரடிப் படைத் துருப்புக்கள் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இச்சம்பவத்தின் போது இரு பவள் கவசவாகனங்கள் முற்றாக தாக்கி அழிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் ஒரு சப் - இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸ் அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர். மேலும் 7 பேர் காயமடைந்தனர்.

39ம் கொலனி முகாம், 36ஆம் கொலனி, 7 ஆம் வட்டார முகாம், 36 ஆம் கொலனி முகாம் ஆகியவற்றில் இருந்து வெளியேறிய விசேட அதிரடிப் படையினர் மீது 40 ஆம் கொலனி என்ற இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் பலத்த தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் நடந்த மோதலின் பின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க

(7 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் ஷெல் தாக்குதல்களில் நேற்றும் ஆறு அப்பாவிகள் சாவு!

### 30 பேர் வரை படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 4

''இடிமுழக்கத் தாக்குதல்'' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்காப் படையினர் நேற்று மூன்றாவது நாளாக மக்கள் குடியிருப்புகள் மீது நடத்திய கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் ஆறு பேர் உயிரிழந்தனர்; 30 பொதுமக்கள் வரை காயமடைந்தனர்.

உரும்பராய், கோண்டாவில், ஊரெழு, நீர்வேலி, கோப்பாய், இருபாலை, தென்மராட்சியின் மட்டுவில், சரசாலை, வடமராட்சியின் துன்னாலை, வல்லிபுரக்குறிச்சி, ஓடக்கரை, பருத்தித்துறை, அல்வாய் பகுதிகளில் படையினரின் ஷெல்கள் பெரும் அதிர்வுடன் விழுந்து வெடித்தன.

நேற்றுக் காலை 11மணிக்கு நாவடிப் பகுதியிலும் ஒரு ஷெல் பயங்கரச் சத்தத்துடன் விழுந்து வெடித்தது. இதனால் யாழ்நகர் வரைபதற்றம் நிலவியது.

நேற்றைய ஷெல் தாக்குதல்களினால் பல வீடுகள், ஆலயங்கள், கடைகள் பலத்த

[7 ஆம் பக்கம் பார்க்க]

## இரத்தம் அவசரம்!

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் கையிருப்பு மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், இரத்ததானம் செய்து உதவுமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-15)

## பருத்தித்துறையில் ஷெல் வீச்சுக்கு நடுநிசி வேளையில் தந்தை, மகள் பலி!

### சிறுவனின் கை துண்டிப்பு

வடமராட்சி, ஒக் 4

வடமராட்சிப் பகுதி மீது நேற்று முன்தினம் திங்கள் இரவு பலாலி முகாமில் இருந்து நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி தந்தையும் மகளும் பலியானார்கள். மேலும் மூவர் காயமடைந்தனர்.

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் விழுந்த ஷெல்லுக்கே இவர்கள் இருவரும் பலியானார்கள்.

திடீரென சுமார் 11-20 மணி முதல் 12 மணி வரை அடுத்தடுத்து ஷெல்கள் ஏவப்பட்டன.

[ 7 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

03-10-1995 செவ்வாய்க்கிழமை அன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெற இருந்த 'மனிதம்' நாடகமானது போர்க்கால சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. அழைப்பிதழ் பெற்றுக்கொண்டவர்களைத் தயவு செய்து மன்னிக்குமாறு தயவாக வேண்டுகிறோம். நாடகம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

நன்றி

'மனிதம்' நாடகக்கலைஞர்கள்
உரும்பிராய்

[38832]

ROTARACT CLUB

# மனமார்ந்த நன்றிகள்


சுன்னாகம் றோட்டரக்ட்கழகத்தினரால் உடுவில்-மானிப்பாய் வீதி புனரமைக்கப் பட்டதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பும் உதவியும் நல்கிய தமிழீழநிர்வாக சேவையின் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனத்துக்கும், யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் அவர்கட்கும், உடுவில் வட்டவைப் பொறுப்பாளர் அவர்கட்கும், மருதனார்மட வர்த்தகர்களுக்கும், உடுவில் மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இன்ரறக்ட் கழகங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Rtr. A. J. G. ஜெயச்சந்திரா
தலைவர்
சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்

(38835)

உ
விநாயகர் துணை

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மலர்வு: 12-12-1927

உதிர்வு: 04-09-1995

## அமரர் நாகலிங்கம் இரத்தினம்
(உரிமையாளர் - றியோ கிறீம் ஹவுஸ்)

கடந்த 04-09-1995 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நாகலிங்கம் இரத்தினம் (றியோ கிறீம் ஹவுஸ்) அவர்களது சபிண்டீகரணக் கிரியைகள் இன்று 04-10-1995 புதன்கிழமை பகல் 12-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது சகல கிரியைகளிலும் கலந்து மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து இருக்கும் உறவினர்களும், நண்பர்களும் (சபிண்டீகரண அழைப்பிதழ் கிடைக்காதவர்கள்) தயவுசெய்து இன்று நடைபெறும் கிரியைகளில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்

இங்ஙனம்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

450, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[38829]

# புலிகளின் குரல் வானொலியில்

04-10-1995

**புதன் இரவு**

- ★ 8-02 — குயிலோசை — நிகழ்ச்சியில் பண்டார வன்னியன் இசை நாடகம் அங்கம்-01
- ★ 8-20 — வாத்தியசாரங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — தமிழ்க்கவி எழுதிய 'பெருமை'

05-10-1995

**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
- ★ 8-00 — மணி வரை விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# தமிழீழ வானொலியில்

**புதன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5 02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு

## 'ஹபரண' கப்பல் காங்கேசனுக்கு நேற்று வந்தது

யாழ்ப்பாணம், ஒக். 4

திருகோணமலையில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட "ஹபரண" கப்பல் நேற்று மாலை காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்தது. இக்கப்பலில் மருந்து வகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்படும் பொதுமக்கள் சிலரை ஏற்றிக்கொண்டு இக்கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வெளியே சுமார் 7 மைல் தொலைவில் இக்கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [ஓ-3-173]

## மரண அறிவித்தல்

### முருகேச செல்லத்துரை துரைரட்ணம்

சாவகச்சேரி கோவில் குடியிருப்பை சேர்ந்த M. S துரைரட்ணம் கடந்த ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி இங்கிலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இராசவள்ளி ஆகியோரின் அன்பு புதல்வனும், சுவினித்தாவின் அன்புக் கணவரும் இரஞ்சன், வசந்தி, குமார், அம்பா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் இங்கிலாந்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
செல்லத்துரை
இராமச்சந்திரன்
(சகோதரன்)

[38811]

அச்சுவேலி

# பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அறிவித்தல்

எமது சங்கத்தின் அங்கத்தவர், பணியாளர்கள் கீழ்வரும் இடங்களில் 04-10-95 முதல் தொடர்பு கொண்டு தங்களுக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

தென்மராட்சியில் இடம்பெயர்ந்தோர் சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் ஏனைய இடங்களுக்கு இடம்பெயர்ந்தோர் வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கும் சமுகம் கொடுக்கவும்.

பொது முகாமையாளர்
பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி.

(சி-2409)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவர்

## குணநாயகம் தேமதுரன் (ஹணி)

அவர்கள்

நேற்றுக் காலை உரும்பிராயில் அகால மரணமானார். அன்னாருக்கு எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்கி அவரின் குடும்பத்தார்க்கு எமது இதயம் கனிந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

சக மாணவர்கள்.
H N. D. C. - II
யாழ். தொழில் நுட்பக் கல்லூரி

(38834)

# கண்ணீர் அஞ்சலி

## கு. தேமதுரன் (ஹணி)

கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி 2 ஆம் வருட H. N D. C மாணவன் கு. தேமதுரன் (ஹணி) 3-10-95 அன்று அகாலமரணமானார். அவருக்கு எமது கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

H. N. D. C
I ஆம் வருட மாணவர்கள்

[38831]

விண்ணக வாழ்வின்

# 2-ம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 23 - 09 - 1934

உதிர்வு: 05 - 10 - 1993

## திருமதி மாகிறேற்றம்மா சால்ஸ்

05-10-1995

அன்பாய் பண்பாய்
அழகின் அடக்கமாய்
அரவணைப்பின் அன்னையாய்
ஆற்றலுடை ஆசானாய்
இன்முகத்துடனே எமை வாழவைத்த
இராசாத்தியே!
உன் ஆன்மா ஈடேற்றம் பெற
என்றும் இறைஞ்சுகிறோம் - தாயே
ஈராண்டு மறைந்தாலும்
உன் பிரிவை ஈடுசெய்ய முடியாது
உன்னில் தவிக்கும்

கணவர், சகோதரர், மைத்துனர்,
பிள்ளைகள், உறவினர்.

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ். புனித மரியாள் பேராலயத்தில் நாளை (05.10.1995) வியாழக்கிழமை காலை 6-15 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

70/9, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

[38839]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெல் தாக்குதலால் ஆயிரக்கணக்கானோர் நேற்றும் இடம் பெயர்ந்தனர்!

யாழ்ப்பாணம், ஒக். 4

நேற்று அதிகாலை வலிகாமம் கிழக்கில் இடம்பெற்ற படையினரின் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள் காரணமாக ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர்.

மக்கள் நித்திரையில் இருந்து விழித்து கையில் எடுத்தது பாதி, எடுக்காதது பாதியாக குழந்தை குட்டிகளையும் இழுத்துக்கொண்டு பாதுகாப்புத்தேடி வீடுகளை விட்டுவெளியேறினர்.

இவர்களில் பலர் கோப்பாய், இருபாலை வயல்வெளிகள் ஊடாக செம்மணி வீதியைச் சென்றடைந்து தென்மராட்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

காலை வேளையில்— வெளிப்பிரதேசத்தில்—மூடை முடிச்சுகளுடன் இவர்கள் வந்தகோலம் மனதை உருக்குவதாக இருந்தது.

அதிகளாக வெளியேறிய மக்கள் பலர் கைதடி, நுணாவில் பகுதிகளில் முகம் கழுவி நீர் அருந்தினர்.

காலை வேளைப் பசியுடன் நீண்டதூரம் செல்லும் இவர்கள் சோர்ந்து காணப்பட்டனர்.

வாகன வசதிகள் அற்ற நிலையில் சைக்கிள்களில் பொருள்களைக் கட்டிக் கொண்டு சிலர் சென்றனர். சைக்கிளை உருட்டிச் செல்ல ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் நடக்க முடியாத நிலையிலும் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்கள் தென்மராட்சி கைதடி, மட்டுவில், சரசாலை வரை இடம்பெற்றதால் அப்பகுதிகளில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களும் வெளியேறினர். [இ-11-15]

## மனித உரிமையை மீறியவர் அலரிமாளிகையில் கடமை

தென்பகுதியில் இடம் பெற்ற ஜே. வி. பி. கலவரங்களின்போது பெருமளவு கொலைகளைப் புரிந்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டவரும் —

மனித உரிமைகளை மீறிய குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டவருமான ஏ. எஸ். பி. ஒருவர் தற்போது அலரி மாளிகையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார் என ''ராவய'' தெரிவிக்கிறது.

ஜே.வி.பி. எழுச்சியின் போது அம்பாந்தோட்டைப் பகுதியில் கலவரங்களைச் சிறப்பாக அடக்கினார் என்பதற்காக அப்போதைய ஆட்சியினரால் பாராட்டப்பட்ட இவர் பின்னர் கேகாலைப் பகுதியில் கலவரங்களை அடக்குவதற்காக நியமிக்கப்பட்டார்.

கேகாலைப் பகுதியில் இவரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பல மனித உரிமை மீறல் வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள இவர் தற்போது அலரி மாளிகையில் கடமையில் அமர்த்தப்பட்டிருப்பது பொலீஸ் அதிகாரிகளிடையே சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதாக 'ராவய' பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது. (இ-10)

## கற்பகபிள்ளையார் கோவில் பகுதியில் பத்து ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன

உரும்பிராய், ஒக். 4

நேற்று முன்தினம் நள்ளிரவு பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் உரும்பிராய் பகுதியிலும் வீழ்ந்து வெடித்தன.

இரு வாரங்களுக்கு முன்னர் ஷெல் வீச்சினால் இருவர் உயிரிழந்த கற்பகப்பிள்ளையார் கோவில் வீதிப் பகுதியில் மட்டும் சுமார் பத்து ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

தெய்வாதீனமாக எவரும் பாதிக்கப்படவில்லை.

பதுங்கு குழிகளில் இருந்ததால் உயிர் தப்பியதாகப் பலரும் கூறினார்கள்.

இதே நேரத்தில் ஊரெழுப் பகுதி மக்கள் இரவோடிரவாக கையில் அகப்பட்ட பொருள்களுடன் வெளியேறி கோண்டாவில் பக்கமாக நகர்ந்தனர். பலாலி வீதி இரவு முழுவதும் ஒரே மக்கள் கூட்டமாகக் காட்சியளித்தது.

அதிகாலையில் உரும்பிராய் பகுதியில் ஷெல் வீச்சுகள் இடம்பெற்றதனைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் பலரும் வீடுகளிலிருந்து வெளியேறினர். [இ-154]

**பண்டாரநாயக்கா**

## சிரார்த்த தினக்கூட்டம் குண்டுப் புரளியால் ரத்து

கொழும்பு, ஒக். 4

கடந்த மாதம் 26ஆம் திகதி பண்டாரவளையில் நடைபெறவிருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிரார்த்த தினக் கூட்டம் குண்டுப்புரளி காரணமாக இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

சிரார்த்ததினக் கூட்டம் அன்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில், பண்டாரவளை நகரசபை மண்டபத்தில் நடைபெறுவதாக இருந்தது.

இந்தக் கூட்டத்தில் மாகாண சபை, நகரசபை ஆகியவற்றின் உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்ற ஏற்பாடாகி இருந்தது.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்பதாக, மண்டபத்தினுள் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகச் செய்தி பரவியது.

இதனையடுத்து கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் மண்டபத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

பின்னர், மண்டபம் முழுவதும் பொலீஸார் சல்லடை போட்டு குண்டினைத் தேடினர்.

குண்டு எதுவும் அங்கு கண்டுபிடிக்கப்படாத நிலையிலும், கூட்டம் ரத்துச் செய்யப்பட்டது. (எ)

**'அன்ரனோவ்' விபத்து**

## இயந்திரக் கோளாறு காரணம் இல்லையாம்

கடந்த மாதம் 13ஆம் திகதி கடலில் விழுந்த அன்ரனோவ்-32 ரக விமானத்தின் இயந்திரத்தில் கோளாறு இருந்ததாக எதுவித சாட்சியமும் கிடைக்கவில்லை.

அன்ரனோவ் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட உக்கிரேனைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையும், விமானியின் தவறுமே இந்த விபத்திற்கு காரணம் என நம்புவதற்கான சான்றுகள் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விமானம் விழுந்ததற்கு இயந்திரக் கோளாறே காரணம் என நிரூபிக்கப்படும் பட்சத்தில் விழுந்த விமானத்திற்குப் பதிலாக புதியதொரு விமானமும், கொல்லப்பட்டவர்களுக்கு கோடிக்கணக்கில் நட்ட ஈடும் வழங்க உக்கிரேன் நாட்டு விமான நிறுவனம் தயாராக உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மீட்புப் பணிக்கு 2 கப்பல்கள்

கொழும்பு, ஒக். 4

நீர்கொழும்புக் கடலில் விழுந்த அன்ரனோவ் விமானத்தை மீட்டு எடுத்து வருவதற்காக மீட்புக் கப்பல்கள் இரண்டு அனுப்பப்பட்டுள்ளன.

கடலில் விழுந்த அன்ரனோவ் விமானத்தை இந்த வாரம் முடிவிற்குள் மீட்டுவிடலாம் என்று மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ள 'மாஸ்டர் டைவேர்ஸ்' கம்பனியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

எனினும் தற்போது நிலவும் மந்தமான காலநிலை மீட்புப் பணியைத் தாமதமாக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் கட்டாக்காலியாக ஆடு, மாடுகள்

### படையினர் பிடித்துச் செல்கின்றனராம்

அச்சுவேலி, ஒக். 4

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், நிலாவரைப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தாம் இடம் பெயர முன் தமது கால் நடைகளை அவிழ்த்து விட்டிருந்தனர்.

சிலர் அவசரத்தில் கால் நடைகளை அவிழ்த்து விடாமல் சென்றிருந்தனர்.

அவிழ்த்து விடப்படாத கால் நடைகளில் பல, ஷெல்வீச்சின் போது அறுத்துக் கொண்டு ஓடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படி கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளை படையினர் பிடித்து தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கின்றனராம்.

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் போதும் படையினர் பெருமளவு கோழிகளையும் கால்நடைகளையும் தின்று ஏப்பம் விட்டிருந்தனர். [இ-11]

## அச்சுவேலி சென்ற ஆசிரியர் திரும்பவில்லை

அச்சுவேலி ஒக். 4

அச்சுவேலியில் உள்ள தமது வீட்டைப் பார்ப்பதற்கும் பொருள்களை எடுத்து வருவதற்கும் சென்ற ஆசிரியர் ஒருவர் திரும்பி வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியிருந்த இவர் கடந்த திங்கட்கிழமை காலை அச்சுவேலிப்பகுதிக்கு சென்றிருந்தார்.

இவருடன் கூடச்சென்றவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியில் தப்பி வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-11]

## சென் ஜேம்ஸ் ஆலய வைபவம்

குருநகர் ஒக். 4

குருநகர் பங்கு சென். ஜேம்ஸ் ஆலயத்தை புனிதப்படுத்தும் திருநிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை விமரிசையாக நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் காலை 6.30 மணிக்கு வைபவம் ஆரம்பமாகும்.

படையினரின் குண்டு வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்த ஆலயம் பங்குத்தந்தை ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகள் மற்றும் பங்கு மக்கள் ஆகியோரின் பெரும் பிரயத்தனத்தால் மீண்டும் புனரமைக்கப்பட்டு புனிதப்படுத்தும் திருநிகழ்வு நடைபெற இருக்கிறது. (இ-51)

## பூதர்மடம் குடியிருப்பில் தண்ணீருக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செப். 4

நீர்வேலி பூதர்மடம் அகதிகள் குடியிருப்பில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சுமார் 21 குடும்பங்களைக் கொண்ட இந்தக் குடியிருப்பில் தண்ணீர் பெற பொதுவான ஒரு குழாய்க் கிணறே உள்ளது.

இந்தக் குழாய்க் கிணறும் கடந்த 6 மாதங்களுக்கு மேலாகப் பழுதடைந்து காணப்படுகிறது.

முன்னர் பல தடவைகள் இங்குள்ள குடியிருப்பாளர்களே தமது செலவில் இக் குழாய்க் கிணற்றைத் திருத்தி பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் தற்போது அக் கிணறு மிகவும் பழுதடைந்து உள்ளது: அத்துடன் கிணற்றில் நீர் வற்றியும் உள்ளது.

இதனால் குடியிருப்பு வாசிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். [எ-15]

## எதிர்ப்பு இருந்தாலும் செயற்படுத்தப்படும்

### தீர்வுயோசனை குறித்து அமரசிறி

அரசியல் தீர்வு யோசனைகளை எவ்வாறான எதிர்ப்புகளின் மத்தியிலும் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தயாராக இருக்கிறார்.

இவ்வாறு கூட்டுறவு மாகாணசபைகள் சுதேசவைத்தியத்துறை அமைச்சர் அமரசிறீ தொடங்கொட தெரிவித்தார்.

அம்பாறை நகர மண்டபத்தில் நடைபெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தலைவர்களது கோட்பாடுகளையும், போதனைகளையும் இளைஞர்கள் நிதானமாக சிந்தித்து பின்பற்ற வேண்டும்.

அப்போது தான் நாட்டில் சிறந்த ஐக்கியத்தையும், சமாதானத்தையும் நிலை நாட்ட முடியும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [இ-எ]

## மேலும் ஒரு மர்மச் சடலம்

கொழும்பு, ஒக். 4

பொல்கொட ஏரியில் இருந்து அழுகிய நிலையில் மேலும் ஒரு இளைஞரின் சடலத்தை பாணந்துறை பொலீஸார் கண்டெடுத்தனர்.

சடலத்தின் காற்சட்டைப் பையினுள் அடையாள அட்டை ஒன்று காணப்பட்டது.

அந்த அடையாள அட்டையின்படி சடலமாக மிதந்த இளைஞர் விவசாயக் காப்புறுதி சபையின் காலிக் கிளையில் கள உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர் எனத் தெரிய வந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய கூட்டுச்சதியால் திருவிலில் தீயுடன் கலந்த பன்னிரு வேங்கைகள்

## நாளை 8ஆம் ஆண்டு நினைவு நாள்

26-9-1987 அன்று பன்னிரு நாட்கள் ஒரு துளி நீரும் பருகாது உண்ணாநோன்பிருந்து தியாகச் சாவைத் தழுவி; இந்திய வல்லாதிக்கத்தின் துரோகத்தனத்தைத் தோலுரித்துக் காட்டிய தியாகி லெப். கேணல் திலீபனை இழந்த வேதனையில் வாடிநின்ற தமிழீழ மக்களுக்கு சில நாட்களுக்குள் — அதாவது 5-10-1987இல் மேலும் துயரத்தைக் கொடுத்த பொறுமையை இழக்கச்செய்த நிகழ்வாக அமைந்ததுதான் லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்படப் பன்னிரு வேங்கைகள் பலாலிப் படைமுகாமுள் பலி கொள்ளப்பட்ட நிகழ்வாகும்.

26-7-1987இல் இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின்படி தமிழ் மக்களின் பாதுகாப்பைத் தானே பொறுப்பேற்பதாகக் கூறி வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குள் காலடி பதிய வைத்த இந்தியா தன் வல்லாதிக்கத்தை நிலைநாட்டும் நோக்கில் தன் ஆக்கிரமிப்புக்கரங்களை பரவ விட்டு தமிழீழமக்களை அடக்கி ஒடுக்கவும், தமிழீழ மக்களின் விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்தொழிக்கும் நோக்கிலும் பல இன்னல்களை விளைவிக்க ஆரம்பித்தது.

ஒப்பந்தத்தில் காணப்படும் சரத்துக்களின்படி பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் சிறையிலும், தடுப்பு முகாம்களிலும் வாடும் தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்படவில்லை. வடக்கு — கிழக்கிற்கான தற்காலிக அரசு நிறுவப்படவில்லை.

ஆனால் புனர்வாழ்வு நடவடிக்கை என்ற போர்வையில் தமிழர் நிலப்பரப்பில் சிங்களக் குடியேற்றங்களை அரசு மேற்கொள்ளுவதைத் தடுக்காது பேசாது பார்த்துக் கொண்டிருந்தது. அதே போன்று ஸ்ரீலங்கா அரசின் பொலீஸ் நிலையங்கள் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் திறக்கப்படுவதையும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தது.

இவற்றைவிட இனத்துரோகிகளை — அம்மண்ணில் இருந்து விரட்டப்பட்டவர்களை — மீண்டும் எம் மண்ணில் கொண்டு வந்து இறக்கி ஊர்காவல் படையினர் என்ற போர்வையில் ஆயுதங்களைக் கொடுத்து தமிழினத் துரோக நடவடிக்கையில் ஈடுபடுத்தியது.

இந்த வகையில் இந்தியாவின் நடவடிக்கைகள் முற்று முழுதாக எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளாக அமைந்தன.

இருந்தும் எமது மக்களில் சிலர் இதை உணர்ந்து கொள்ளவில்லை. அவர்கள் இந்தியாவை நம்பினர். இந்தியா எமக்கு வாழ்வளிக்கும் என்ற மாயையில் — போலி நம்பிக்கையில் அவர்கள் இருந்தனர்.

இதனை உணர்ந்து கொண்டதனால்தான் திலீபன் உண்ணாவிரதமிருந்து தியாக மரணத்தைத் தழுவினான்.

இதைத் தொடர்ந்து எமது தளபதிகள் லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன், மேஜர் அப்துல்லா, கப்டன் பழனி, கப்டன் கரன், கப்டன் மிரேஸ், கப்டன் நளன், லெப். அன்பழகன், லெப். தவக்குமார், 2ஆம் லெப் ரெஜினோல்ட், 2ஆம் லெப் ஆனந்தகுமார், கப்டன் ரகுவப்பா ஆகிய பன்னிருவரும் சிறிலங்கா கடற் படையினரால் கைது செய்யப்பட்டு ஒப்பந்த மீறல் இடம்பெற்ற போதிலும் இந்திய அரசு பேசாது இருந்து விட்டது.

கைது செய்து பலாலி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட எமது தளபதிகளை இலங்கை அரசு கொழும்புக்கு கொண்டு செல்ல முற்பட்ட போதும் இந்திய அரசு அதனைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்க முற்படவில்லை. இந்நிலையில் எமது தளபதிகள் பன்னிருவரும் 05-10-87 அன்று இயக்க மரபுக்கிணங்க "சயனைற்" உட்கொண்டு வீரச் சாவைத் தழுவ நேர்ந்தது.

இவர்களது சாவுகள் எம்மக்களின் போலியான நம்பிக்கைகளை, மக்களின் உள்ளத்து மாயைகளை தகர்த்துப் பொடிபொடியாக்கின.

இதனால் தொடர்ந்து இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான போரை ஆரம்பித்து வைத்தது. இந்தப் போரினை எதிர் கொள்வதற்கு எமது போராளிகளின் உள்ளத்திற்குப் பலத்தையும், உறுதியையும் எமது தளபதிகள் பன்னிருவரின் சாவுகள் வீரச் சாவுகள் அளித்தன. அவ்வுறுதியோடும், பலத்தோடும் போராடி இந்திய இராணுவத்தை எமது மண்ணில் இருந்து அகற்ற முடிந்தது.

இன்றும் எம் மாவீரர்களின் பாதையில் எமது தலைவரின் வழிகாட்டலில் அவர்களின் கனவை நனவாக்க எமது போராளிகள் போராட்டத்தை முனைப்போடு முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (இ)

## இழப்பு குறித்து அரச அதிபருக்கு அறிவிப்பு

வலிகாமம் கிழக்குப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்த தகவல் கொழும்பிலுள்ள யாழ். அரச அதிபருக்கு யாழ் செயலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வலிகிழக்கு பகுதியில் படையினரின் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 55 பேர் காயமடைந்தனர். கோப்பாய் பிரதேச செயலர் பகுதியில் இருந்து 9 ஆயிரத்து 665 குடும்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். (இ-4)

---

வலி. கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தினால் நெல் உடைக்கும் சைனா ஆலை இயந்திரம், இரண்டு சில்லு உழவு இயந்திரப் பெட்டி, கலப்பை ஆகிய பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளது. குறித்த பொருட்களை பெற விரும்புவோர் பொருட்களை தலைமையக கரும நேரத்தில் பார்வையிட்டு கேள்வி விண்ணப்பங்களை "பொது முகாமையாளர், வலி.-கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு 07-10-95 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

— பொதுமுகாமையாளர்.

நீர்வேலி,
1995-09-23 (வி-2408)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 20 — 08 — 1932



மறைவு: 04 — 09 — 1995

### ஐயாத்துரை விசுவலிங்கம்
(பிரபல வர்த்தகர்)

எமது குடும்பத் தலைவராக இருந்து எமக்குத் தோன்றாத் துணையாய்ச் சகல வழிகளிலும் எமது நல்வாழ்வுக்கு ஆவன செய்து சடுதியில் எமைப் பிரிந்து பேரின்பப் பெருவாழ்வெய்திய எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா இறைவனடி இணைந்து நிறைவுடன் வாழ நிறைமனதாய் இறைஞ்சுகின்றோம் இறைவன் தாள் வணங்கி

இன்று (04-09-1995) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

— குடும்பத்தினர்.

"விமலமனை"
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (33826)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## விஞ்ஞானபீட பரீட்சைகள் 1995

1995 ஆம் ஆண்டு கார்த்திகை - மார்கழி மாதங்களில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்குரிய பரீட்சை விண்ணப்பப்படிவங்களை உரிய கட்டணப்பற்றுச்சீட்டுடன் 1995-10-16 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எவ்வெவ் பாடவிதான அலகுகளில் பரீட்சை நடைபெறும் என்ற விபரக் கொத்தையும் பரீட்சை விண்ணப்பப்படிவங்களையும் யாழ் பல்கலைக்கழக பரீட்சைக்கிளை; விவசாய பீடம், கிளிநொச்சி; இணைந்த பல்கலைக்கழக கல்லூரி, வவுனியா; யாழ். கூட்டுறவுக்களஞ்சியம், 154, ஆமர் வீதி, கொழும்பு 13 ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைகள் 1995-11-07 அன்று ஆரம்பமாகும்.

— பதிவாளர்,
(வி-2406)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

## கலைப்பீட பரீட்சைகள் - 1994

(கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / முதுமெய்யியல்மாணி தகுதிக்காண் தேர்வு)

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன.
மாணவர்கள் கவனத்திற்கு கொள்ளவும்.

| பரீட்சைகள் | தொடங்கும் திகதி | | முடிவடையும் திகதி |
|---|---|---|---|
| 1ஆம் ஆண்டு கலை/வர்த்தகம்/முகாமைத்துவம் | 14-11-95 | — | 23-11-95 |
| 2ஆம் ஆண்டு சிறப்புக்கலை பகுதி -I கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்/முதுமெய்யியல்மாணி தகுதிகாண் தேர்வு | 04-12-95 | — | 29-12-95 |
| 3ஆம் ஆண்டு சிறப்புக்கலை பகுதி -II கலை / வர்த்தகம் முகாமைத்துவம் / முதுமெய்யியல்மாணி - தகுதிகாண் பரீட்சை | 27-12-95 | — | 26-01-96 |
| 4ஆம் ஆண்டு சிறப்புக்கலை பகுதி -III கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / முதுமெய்யியல்மாணி- தகுதிகாண் பரீட்சை | 22-01-96 | — | 26-01-96 |
| 2 ஆம் ஆண்டு பொதுக் கலை | 04-12-95 | — | 15-12-95 |
| 3 ஆம் ஆண்டு பொதுக் கலை | 27-12-95 | — | 10-01-96 |
| பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ் பரீட்சை | 13-11-95 | — | 21-11-95 |

பதிவாளர்

(வி/2407)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக உவர்த்தன்மை அடையும் குடாநாட்டு நன்னீர்க் கிணறுகள்

## அளவுக்கு மீறிய பயன்பாடு காரணம்

யாழ். குடாநாட்டில் உள்ள நன்னீர் கிணறுகள் பலவற்றில் முன்னரை விட வேகமாக நீர் உவர்த்தன்மை அடைந்து வருவதாகத் தெரிய வருகிறது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடமாகாண அலுவலகத்திற்குக் கிடைக்கும் புகார்கள் இதனை உறுதி செய்வனவாக உள்ளன.

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் குடாநாட்டின் ஒரு சில இடங்களிலே அதிகளவில் தங்கியுள்ளனர்.

இவ்வாறு தங்கியுள்ளவர்கள் தமது தேவைக்காக ஒரே கிணற்றில் இருந்து கூடுதலான நீரை எடுப்பதும் முன்னரைவிட வேகமாக நன்னீர் உவர்த்தன்மையடைவதாக தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை யாழ் மாநகரசபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மக்கள் செறிவாக வாழும் இடங்களில் நீரில் பக்றீரியாக் கிருமிகள் காணப்படுவதாக ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கிணற்றுக்கும், மலசல கூடத்திற்கும் இடையில் குறைந்தது 40 முதல் 50 அடி இடைவெளி இருக்க வேண்டும் என்பது கவனிக்கப்படாமல் தற்போது மலசல கூடங்கள் அமைக்கப்படுவதே இதற்குக் காரணமாகும்.

இவ்வாறு போதிய இடைவெளி இன்றி மலசல கூடங்கள் ஊடாக கிணற்று நீரில் பக்றீரியாக் கிருமிகள் தொற்றி நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவ ஏதுவாகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [எ-4]

# வானொலி நிலையம் மீது அ. தி. மு. கவினர் தாக்கு

## மதுரையில் சம்பவம்

தமிழ்நாட்டின் ஆளும் அ. தி. மு. க. தொண்டர்கள் சுமார் நூறுபேர் மதுரை வானொலி நிலையத்துக்குள் கடந்த சனிக்கிழமை புகுந்து அதனைத் தாக்கிச் சேதப்படுத்தினர்

இந்திய மத்திய அரசுக்கு எதிராக முதலில் மதுரை வானொலி நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய அ. தி. மு. க. தொண்டர்கள் திடீரென வானொலி நிலையத்துக்குள் புகுந்து மின் விளக்குகளையும் தொலைபேசி இணைப்புகளையும் தாக்கிச் சேதப்படுத்தினர். வானொலி நிலைய பெயர்ப் பலகையும் நொறுக்கப்பட்டது.

இச்சம்பவம் இடம் பெற்ற போது அங்கு கடமையிற் இருந்த பொலீஸார் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காது இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-4]

## உலர் உணவு

குருநகர், ஒக். 4

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 28-ம் இலக்க முத்திரைகளுக்கான உலருணவுகள் இன்று தொடக்கம் வழங்கப்படுவதாக பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். [இ-51]

# விளையாட்டு நிகழ்வுகள்

நல்லூர் கல்விக்கோட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி 15 வயதுப் பிரிவு இறுதி ஆட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கனகரத்தினம் ம. ம. வி. யில் நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம் கல்விக் கோட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு;

★ 2 30 மணி [15 வயதுப் பிரிவு நாவாந்துறை றோ. க. வித். எதிர் சென். ஜோன்ம. வித்.

★ 3. 15மணி: [17 வயதுப் பிரிவு 3 ஆம் இடத்துக்கான போட்டி] பெரியபுலம் ம. வி. எதிர் நாவாந்துறை றோ. க. வித்.

★ 4 15 மணி (1 ஆம் இடத்துக்கான போட்டி) சென். ஜேம்ஸ் ம. வி. எதிர் யாழ் இந்துக்கல்லூரி (க)

(7 ஆம் பக்கமும் பார்க்க)

# பிரான்ஸுடனான உறவு; 12 நாடுகள் துண்டித்தன

லண்டன் ஒக். 4

11 நாடுகள் அடங்கிய தென் பசுபிக் அரங்கு. பிரான்ஸுடனான தனது உறவுகள் அனைத்தையும் தற்காலிகமாகத் துண்டித்துள்ளது.

நேற்று முன்தினம், ஐக்கிய நாடுகள் சபையின் 50 ஆவது ஆண்டுக்கூட்டத்தில் உரையாற்றிய அந்த அரங்கின் தலைவர் சேர் ஜுலியஸ்சான் இதனைத் தெரிவித்தார்.

தெற்குப் பசுபிக்கடலில் கடந்த மாதம் 30 ஆம் திகதி பிரான்ஸ் அணுகுண்டுப் பரிசோதனையை நடத்தியதற்கு அடுத்த நாள் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

தொடர்ந்தும், பிரான்ஸ் தனது அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தி வருவதை உலகின் பல நாடுகளும் கண்டித்துள்ளன. (இ-எ)

# அரச சார்பற்ற நிறுவன பணியை வன்னியில் விஸ்தரிக்க வேண்டும்

வா வா உழைக்க வா தம்பி; தேச வாழ்வே உந்தனை நம்பி... என்ற பாடல் வரிகள் நாம் பயணம் செய்த வாகனத்தில் ஒலித்துக்கொண்டிருந்தன.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வெளியீடான ஒலிப்பதிவு நாடா ஒன்றில் உள்ள இப் பாடலை வன்னியில் நாம் பயணம் செய்த எல்லா இடங்களிலும் ரசிக்க நேர்ந்த போது வன்னி மண்ணின் அழைப்புக் குரலாகவே அது எமக்குக் கேட்டது.

வன்னி சுற்றுப் பயணத்தின் போது பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வெளிநாட்டு தொடர்புப் பிரிவைச் சேர்ந்த திரு. கலைவர்ணன் எமக்கு வழிகாட்டியாக செயற்பட்டு விளக்கமளித்தார்.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்தி வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த சிலரும் எம்முடன் கூடவே வந்தனர்.

பயணத்தின் முதற் கட்டமாக கிளிநொச்சியில் இருந்து பூநகரி முழங்காவில் ஊடாக நாச்சிக்குடா நோக்கி சென்றோம்.

நீண்ட செம்மண் பாதை. புழுதியை வாரி இறைத்தபடி எமது வாகனம் அக்கராயன் ஊடாக சென்றுகொண்டிருந்தது.

அப் பிரதேசம் காடுகளும் பொட்டல் வெளிகளும் நிறைந்த பகுதி.

குடியிருப்புகள் அரிதாகவே காணப்பட்டன.

வளமான மண் தரிசு நிலமாகக் காட்சியளிக்கிறது. இடையிடையே சிறிய அளவில் பயிர்ச் செய்கை நிலங்களை காணலாம். பெரிய அளவில் குடியிருப்புகளை அமைக்க ஏற்ற பிரதேசம் அது.

முற்றிப்பு குளத்தில் இருந்தே அப் பகுதிக்கு நீர்ப்பாசனம் கிடைக்கிறது.

எமது பயணத்தின் நடுவே முழங்காவில் பிள்ளையார் கோயிலடியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் சிவராஜா (வயது 39) என்ற குடும்பஸ்தரைச் சந்தித்தோம்

கடந்த ஒரு வருட காலமாக அப் பகுதியில் விவசாயம் செய்து வருகிறார்.

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் பின் மல்லாகத்தில் இருந்த தனது மனைவி பிள்ளைகளை அங்கு அழைத்து புது வாழ்வு தொடங்கியிருக்கிறார்.

முழங்காவில் கிராமிய உற்பத்திக் குழு அவருக்கு கடன் உதவி வழங்கியுள்ளது. கயிறு திரிக்கும் பொறி ஒன்றும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது

**வளம் கொழிக்கும் வன்னி மண்ணில்...**

பிள்ளைகளுடன் சேர்ந்து சுய தொழிலில் ஈடுபடுகிறார்.

"யாழ்ப்பாணத்தில் இருப்பதைவிட இங்கு வசதிகள் நிறைய உள்ளன. குடும்பமாக சேர்ந்திருப்பது மகிழ்ச்சி நிம்மதியைத் தருகிறது"— என்கிறார் அவரது மனைவி.

"காட்டுக்குள் இருந்து யானைகள் வரலாம். மற்றபடி பயம் எதுவும் இல்லை"— என்கின்றனர் அவரது பிள்ளைகள்.

குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்து வன்னியில் புது வாழ்வு வாழத் தொடங்கியுள்ளவர்களுக்கு சிவராஜாவின் குடும்பம் நல்ல முன்மாதிரி ஆகும்.

### சோலைக் கிராமம்

முழங்காவிலுக்கு அருகே சோலைக் கிராமம் என்னும் பகுதி.

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து கிளிநொச்சி பகுதிக்குச் சென்ற சுமார் 50 குடும்பங்களைத் தங்கவைக்க தற்காலிக முகாம் ஒன்றை அமைக்கும் பணி அங்கு சிரமதான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது

பல்லவராயன் கட்டு, கரியாலை நாகபடுவான் கிராமங்களைச் சேர்ந்த சுமார் முந்நூறு பேர் கொளுத்தும் வெய்யிலில் சிரமதானப் பணியில் உற்சாகத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

பயன்படுத்தப்படாத காணி ஒன்றில் பற்றைகளை வெட்டி அகற்றி கொட்டில்களை அமைக்க ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் பூநகரி—முழங்காவில் அபிவிருத்தி நிறுவனம் அந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தது

கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழான திட்டக் கிராமமே சோலைக் கிராமம்.

அங்குள்ள மூன்று கிராமங்களில் இடம் பெயர்ந்த குடும்பங்கள் பல குடியமர்த்தப்பட்டுள்ளன.

பூநகரி மற்றும் மண்டைதீவு பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த பலரும் அப் பகுதியில் குடியேறியுள்ளனர்.

இடம் பெயர்ந்து வரும் மக்களுக்கு ஆரம்ப அடிப்படை வசதிகளை வழங்க அரச அதிகாரிகள் போதிய ஏற்பாடுகள் செய்யவில்லை என்று புனர்வாழ்வு பணியில் ஈடுபடும் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சமீபத்தில் இடம்பெயர்ந்து அங்கு சென்ற குடும்பங்களுக்கு ஒரு வாரத்துக்கு ... [illegible]

### உலர் உணவு பெறுவதில் தடங்கல்

சண்டிலிப்பாய், இளவாலை, மாதகல் ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற குடும்பங்கள் தமது உலர் உணவு அட்டைகளை கிளிநொச்சி மாவட்டத்துக்கு மாற்றிக்கொள்ள முடியாத நிலை உள்ளது.

தமது பகுதி உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுக் கடிதம் இருந்தால்தான் அதனை மாற்றிக் கொள்ள முடியும் என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடைமைகள் எல்லாவற்றையும் கைவிட்டு ஏதிலிகளாக இடம்பெயர்ந்த மக்களிடம் இது போன்ற நிபந்தனைகளை அரச அதிகாரிகள் விதிப்பது பொருத்தமற்றது என்றும் —

இது விடயத்தில் வழமையான நிர்வாக விதிகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் சிலர் எம்மிடம் கருத்து தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒக்ஸ்பாம், கோரு—. மனித முன்னேற்ற நடு நிலையம் போன்ற நிறுவனங்கள் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதில் இந் நிறுவனங்கள் உதவி வழங்கி வருகின்றன.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சோலைக் கிராம திட்டத்தை செயற்படுத்தியுள்ளது

சுயதொழில் வசதிகளை அவர்கள் வழங்கி வருகின்றனர்.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய நிதியம் மூலம் கடன் அடிப்படையில் நிதி உதவி பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கு நீர் இறைக்கும் பம்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

கரியாலை நாகபடுவான் குளத்தில் நீர் வற்றியுள்ளது குளத்தில் கூடிய நீரைத் தேக்க இன்னும் வசதி செய்யப்பட வேண்டும்.

மூடக்கன் ஆற்றை திசை திருப்பி குளத்துக்கு நீரைத் தேக்கும் திட்டம் ஒன்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஆயிரத்து 500 ஏக்கர் நிலப் பிரதேசத்துக்கு இக் குளத்தில் இருந்தே நீர்ப்பாசனம் கிடைக்கிறது

பருவமழை பெய்ததும் குளத்தில் நீர் தேங்கி விடும். அதன் பின் பயிர்ச்செய்கை தொடங்கும் அப் பகுதி மக்களின் வாழ்க்கை பிரகாசிக்கும்.

வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசின் உதவிகள் எதுவும் பெரிதாகக் கிடைக்காத நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் அவசியமாகின்றன என்பதை பலரும் அழுத்த சுட்டிக் காட்டினர்

### தொண்டு நிறுவன உதவிகள்

குடாநாட்டுக்குள்ளேயே அதிகம் இடம்பெறும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என சிலர் விரும்புகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆரம்ப வசதிகளை — சில அடிப்படை வசதிகளை — வழங்க இந் நிறுவனங்கள் பெரிய அளவில் உதவ முன்வந்தால் பின்னர் அந்த மக்கள் வன்னியில் காலூன்ற அது கைகொடுத்து உதவுவதாக இருக்கும் என்பதே பலரதும் கருத்தாக உள்ளது. ✶

நல்லூர் தாஸ்

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### கோழிகள் விற்பனை

நாலரை மாதங்கள் நிரம்பிய Hy-Line வெள்ளை பேடுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர். [38792]

### காப்பெற் விற்பனைக்கு

காப்பெற் 10 அடி x 8 அடி விற்பனைக்குண்டு. தனரத்தினம், இல. 8, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (38818)

### இலக்கணம்

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய ஒத்த கருத்துச் சொற்களும், எதிர்கருத்துச் சொற்களும் ஆண்டு 5, 6, 7, 8, 9, 10 மாணவர்களுக்கு. தொகுப்பு: வெ. நவமோகன். விற்பனையாகின்றது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2399)

### மணப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் கம்பனியில் வேலை பார்க்கும் 31 வயது. ரேவதி, பாவம் குறைந்த, குற்றமற்றவருக்கு அரச சேவையிலுள்ள அல்லது படித்த பெண் தேவை. சைவ போசனமுடையவரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: த. இராமநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), புஸ்பநாதன் வீதி, இணுவில். (38804)


## மரம் ஏறியவர் விழுந்து காயம்

யாழ்ப்பாணம் ஒக்.4

கள்ளு சீவுவதற்காக தென்னை மரத்தில் ஏறியவர் மரத்தின் உச்சியில் இருந்தே தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

மட்டுவிலில் திங்கள் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கனகு ரவிச்சந்திரன் (வயது 30) என்பவரே காயமடைந்தவர் ஆவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஓ-15]

# காலதாமதமாகக் கிடைக்கும் இடம் பெயர்ந்தோர் நிவாரணம்

அண்மைக் காலங்களில் இடம்பெற்ற பல்வேறு ராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணங்களை உடனடியாக வழங்க முடியாமைக்கு உதவி அரசாங்க அதிபர்கள் தத்தமக்குரிய பிரதேசங்களில் புள்ளிவிவரங்களை விரைவாகத் திரட்ட முடியாமற் போனதே காரணமாகும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ச்சியாக இடம்பெறும் ராணுவத் தாக்குதல்களால் மக்கள் அடிக்கடி இடம்பெயர்வதும் அல்லோல கல்லோலப்படுவதுமே புள்ளிவிவரங்களை சரியாகவும் உடனடியாகவும் திரட்ட முடியாமற் போனதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் இடம்பெற்ற பல்வேறு ராணுவ நடவடிக்கைகளாலும் இடம்பெயர்ந்த மக்களின் விவரங்கள் பிந்திய நிலையில் உதவி அரச அதிபர்கள் ஊடாக தமக்குக்கிடைத்துள்ளதாக யாழ் செயலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அடுத்தஇரு வாரங்களுக்கு தேவையான நிவாரணப்பொருள்களை வழங்க பல நோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் தயாராகியுள்ளன என அறியவருகிறது.

இந்நிவாரண வழங்கலில் ஆரம்பம் முதல் பல தடவைகள் இடம்பெயர்ந்து அவதியுறும் மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி, நீர்வேலி, மருதங்கேணி, கட்டைவேலி, உடுப்பிட்டி, புலோலி, பருத்தித்துறை போன்ற இடங்களின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரண வழங்கலுக்குரிய உணவுப் பொருள்களை பெற்றுக்கொண்டதாகவும் யாழ். செயலகத்தில் தெரிவிக்கப்பட்டது.

அவ்வப் பகுதிகளுக்குரிய உதவி அரசாங்க அதிபர்கள் நிவாரண வழங்கல்களை கண்காணித்துத் துரிதப்படுத்த வேண்டும் என யாழ். அரசாங்க அதிபர் அவர்களைக் கேட்டுள்ளார். (இ-ந)


### இலவச அறிமுக கருத்தரங்கு A/L 97

ஸ்ரீஜெயவர்த்தனபுர, யாழ். பல்கலைக்கழகங்களின் வெளிவாரி வணிகமாணி பட்டப்படிப்பை கடந்த 15 வருட காலம் வெற்றிகரமாக நடத்தி வரும் பட்டப்படிப்புகள் கல்லூரியின் அதே அனுபவ விரிவுரையாளர்களைக் கொண்டு A/L 97 புதிய பாடத் திட்டத்தினை ஆரம்பிக்குமுகமாக 08-10-1995 ஞாயிறு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இக்கருத்தரங்கில் எவரும் கலந்து கொள்ளலாம்.

1. வணிகப் புள்ளி விவரவியல்
   திரு V. சத்தியசீலன்
   உதவித் திட்டமிடல் பணிப்பாளர்
   (20 வருட கால அனுபவம் பெற்ற புள்ளிவிவரவியல் விரிவுரையாளர்)
2. வணிகக் கல்வி
   திரு. T. பாலகிருஷ்ணன் B. A. (Cey)
   (பகுதி நேர விரிவுரையாளர்)
3. கணக்கீடு
   ★ நிதிக்கணக்கீடு
   திரு. V. உருத்திரசிங்கம் B. Com.
   (பகுதி நேர விரிவுரையாளர்)
   ★ இரயமுகாமைக் கணக்கீடு
   திரு. S. உமாகாந்தன் B. Com.
   (விரிவுரையாளர்)
4. பொருளியல்
   திரு. V, அருளானந்தம் B.A. (Hons.)

மற்றும் பல விரிவுரையாளர்கள் கலந்து சிறப்பு விரிவுரைகள் கருத்துக்கள் வழங்குவார்கள்.

பட்டப் படிப்புகள் கல்லூரி,
73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். [சி-2397]


## ஏழாலை, புன்னாலைக்கட்டுவனில்

# விவசாய உற்பத்திகள் படையினரால் சூறை!

யாழ்ப்பாணம், ஒக். 4

ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதிகளை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினர் அப்பகுதிகளில் வீடுகளில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த விவசாய உற்பத்திப் பொருள்களை சூறையாடியுள்ளனர்.

இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்ற இடங்களில் வீடுகளுக்குச் சென்று பார்த்த விவசாயிகள் பலர் தாம் சேகரித்து வைத்த வெங்காயம் போன்ற பொருள்கள் சூறையாடப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இப்பகுதிகளில் வசிக்கும் பெரும்பாலானோர் விவசாயம் செய்து சீவியம் நடத்தி வருபவர்களாவர். (ஐ-எ-4)


### DAY CLASSES

(95 A/L பரீட்சை எடுத்தவர்களுக்கு)
ஆரம்பம்:
05 - 10 - 1995
வியாழன் 8 a m
CHE.— 8 a m
PHY. — 9 a.m
PURE / BOT. — 10 a m
APP / ZOO. — 11 a.m
(அனுமதிகள் வழங்கப்படுகின்றது)

P' NEW SCIENCE CENTRE
எழிலகம் முன்
யாழ்ப்பாணம்.
(சி-2404)

### வருந்துகிறோம்

02 - 10 - 1995 உதயனில் வெளியான
திருமதி செல்லம்மா தம்பிராசா
அவர்களின் மரண அறிவித்தலில்
அன்னாரின் மருமகள் க. சறோஜினிதேவியின் பெயர் விடுபட்டமைக்காக மனம் வருந்துகிறோம்.

திருமதி சு. தர்மலிங்கம்
மஞ்சத்தடி,
இணுவில். (38821


# பனாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்

## மக்கள் மத்தியில் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஒக் 4

சிங்கள அரசின்பாரிய உணவு நெருக்கடியைஏற்படுத்தும் திட்டத்தை தவிடு பொடியாக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமான தற்கால சூழ்நிலையில் கிடைக்கும் ஒவ்வொரு பனம்பழத்தினையும் பயன்படுத்தி பனாட்டு உற்பத்தியை அதிகரிக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கிராமங்கள் தோறும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்தவகையில் அண்மையில் உடுவில் வட்டத்தில் நடத்தப்பட்ட பிரசாரத்தை அடுத்து அப்பகுதி மக்கள் இதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை காணக் கூடியதாக உள்ளது.

எதிரியின் திட்டமிட்ட பொருண்மிய அழுத்தத்தை முறியடித்து எமது தேசிய விடுதலைப் போருக்கு வீறு சேர்க்க ஒவ்வொருவரும் எம் நாட்டின் அனைத்து வளங்களையும் உச்சப்பயன்பாட்டுக்கு கொண்டுவருதல் அவசியமாகிறது என்று பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. [ஓ]

## 1999 ஆம் ஆண்டு மண்டேலா ஓய்வு பெறுவார்

ஜொகான்னஸ்பேர்க், ஒக். 4

தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா எதிர்வரும் 1999ஆம் ஆண்டில் தனது ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளார்.

புதிதாகப் பதவியேற்கும் ஜனாதிபதி மீது தான் ஆதிக்கம் செலுத்தப்போவதில்லை என்றும்—

தனது பிள்ளைகள் மற்றும் குடும்பத்திற்கு சேவை செய்வதே இனி தனது பணி என்றும் அவர் தெரிவித்தார். (எ)


### SCIENCE COLLEGE

பெருமாள கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

96 A/L
பகல் மாலை வகுப்புக்கள்

பௌதிகவியல்:
திரு சம்பந்தன்
B Sc (Hons)
தாவரவியல்:
திரு. பாலா

ஆரம்பம்:
05 – 10 – 1995
வியாழன்
(நேர அட்டவணையை நேரில் பெறவும்)
(சி-2402)

### 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் நாகலிங்கம் இரத்தினம்
(றியோ கிறீம் ஹவுஸ்)

04 – 09 – 95 இல் அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத்தின் மூத்த தலைவனும் ஸ்ரீ ஞான வைரவர் மீனாட்சி அம்மன் தேவஸ்தான தலைவரும் பிரபல தொழில் அதிபரும், சிறந்த சமூக சேவையாளருமாகிய

அமரர் நாகலிங்கம் இரத்தினம்

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம். அவர் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதோடு அவர்கள் குடும்பத்திற்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

காலங்களே தருகின்றன. அவையே பறிக்கின்றன. காலங்களே சிரிக்கச் செய்கின்றன. அவையே அழவும் வைக்கின்றன.

கண்ணீருடன்
தி. திருநாவுக்கரசு
குடும்பத்தினர்
[illegible]
பண்டத்தரிப்பு.

சுகன் கனியகம்
240, பாங்சால் வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம். [38817]

### 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

அமரர் நாகலிங்கம் இரத்தினம்
(ஸ்தாபகர், றியோ கிறீம் ஹவுஸ்)

04-09-1995 இல் காலமான
அமரர் நாகலிங்கம் இரத்தினம்
அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— உரிமையாளரும், ஊழியர்களும்.

சத்தியா வெதுப்பகம்,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம். (38816)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

**292/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**


## எறிகணைக் கொடுமை

ஸ்ரீலங்கா இராணுவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த ''இடிமுழக்கத் தாக்குதல்'' நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சு இந்த இராணுவ நடவடிக்கையை மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே வகுத்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறது. ஆனால் இந்த ''இடிமுழக்கத்தின்'' இலக்கு என்ன என்பதை வெளியிட மறந்து விட்டது.

இராணுவ நடவடிக்கை, இருதரப்புச் சமர் நடைபெறாத காலங்களிலும், அரசாங்கப் படையினர், தமக்கு ''நரிவெருட்டும்'' போதெல்லாம், தமது பாதுகாப்பில் சந்தேகம் தோன்றும் போதெல்லாம் தூரத்தே மக்கள் குடிமனைகள் மீது எறிகணை வீசி அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களைக் கொல்வது சர்வசாதாரணமாகி விட்டது.

இப்போது நடந்து கொண்டிருக்கும் ''இடிமுழக்கம்'' இராணுவ நடவடிக்கையின் போதும் படையினர் தூர இடங்களுக்கெல்லாம் எறிகணை வீசி, மக்களைக் கொல்கிறார்கள்.

இடிமுழக்கத்தின் செருக்களமாக நிலாவரையைக் கொள்ளலாம். அங்கிருந்து பருத்தித்துறையும், துன்னாலையும், சரசாலை மட்டுவிலும் எங்கே உள்ளன? இப்பகுதிகள் அனைத்துமே நிலாவரையிலிருந்து பத்து மைல்களுக்கும் அதிக தூரத்தில் உள்ளவை.

விடுதலைப் புலிகள், பத்துப் பதினைந்து மைல் தூரத்தில் நின்றா அரசாங்கத் துருப்புக்களுடன் மோதுகிறார்கள்? இல்லை. நெற்றிக்கு நெற்றியாக நேருக்கு நேர் நின்றே அவர்கள் பதிலடி கொடுக்கிறார்கள்.

படையினர் திரண்ட இடங்களுக்குள் விடுதலைப் புலிகள் ஊடறுத்துச் சென்று தாக்கும் போது, பத்து மைல்களுக்கு அப்பால் இராணுவம் எறிகணை வீசுவதன் நோக்கம் என்ன?

யாழ்.குடாநாட்டில், அதன் கிராமங்கள் அனைத்திலும், மக்கள் செறிந்து வாழ்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்கும், இராணுவத்துக்கும் நன்றாகத் தெரியும்.

விடுதலைப் புலிகளுடன் மோதுவது, அவர்களைத் தாக்குவது என்று கூறிக்கொண்டு தூரத்தே உள்ள கிராமங்களுக்கு, குடிமனைகளுக்கு எறிகணை வீசுவது விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக அல்ல; தமிழ்ப் பொது மக்களைக் கொல்வதற்காகவே என்பதற்கு எவ்வித மாற்றுக் காரணமும் இருக்க முடியாது.

மக்கள் வாழும் பகுதிகளை யுத்த களங்களாக மாற்றிக்கொண்டு, மக்களின் உயிரையும், வாழ்வையும் பொருட்படுத்தாது அவர்களின் வாழ்விடங்களில் எறிகணை வீசுவதும், குண்டுத் தாக்குதல் நடத்துவதும்—

அவர்கள் நலன் குறித்து எவ்வித அக்கறையும் இல்லாமையாலேயாகும். அவர்களை இயன்றவரை இறந்தொழியச் செய்வதே அரச படைகளின்— அரசாங்கத்தின்—இலக்கு என்பது தெட்டத் தெளிவாகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

தென்மர ... ாட்சி கல்விக்கோட டப் பாடச ... ாலைகளுக்கிடையி லான உ ... தப்பந்தாட்டச் சுற் றுப் போட் ... டியின் 19 வயது பிரிவின் அ ... ரயிறுதி ஆட்டங் கள் இன்று ... பிற்பகல் சாவகச் சேரி நகரச ... பை பொது விளை யாட்டு மை ... தானத்தில் நடை பெறும். ... ந்து கொள்ளும் சாட்சா ... லை அணிகள் வருமாறு:-

★ சாவக ... ச்சேரி இந்து எதிர் மீசாலை ... வீரசிங்கம் ம.வி.

★ சாவக ... ச்சேரி டிறிபேக் எதிர் கச்சா ... ய் அ. த. க. பா.

★ ★ ★

விடுதலை ... ப்புலிகள் மகளிர் அமைப்பு ச ... மூக மேம்பாட்டுப் பிரிவின் கீழ் ... இயங்கும் பளை வ ... ன்னா ... ன்கேணி சேசவ பாலர் பா ... ட சாலை சிறார் களின் மெய் ... வன்மைப் போட் டிகள் நாளை ... பிற்பகல் 2.00 மணிக்கு ப ... ளை மாவீரர் விளையாட்டு ... மைதானத்தில் திருமதி ர ... . சச்சிதானந்தம் தலைமையில் ... நடைபெறும். முதன்மை ... விருந்தினராக பளை பிரதே ... ச செயலர் பா. செந்தில் ... ந்தன் கலந்து கொள்வார்.

(உ-117)

## உணவு முத்திரை நிவாரணம்

யாழ் ... ப்பாணம், ஒக். 4

வறுமை நி ... வாரண உணவு முத்திரையி ... ஐந்தாம் இலக் கப்புள்ளிக்கு ... யாழ்ப்பாண பிர தேச செய ... லகப் பிரிவில் உணவுப் பொ ... பொருள்களை வழங்கும் ... கால எல்லை நீடிக்கப்பட்டு ... ள்ளது.

குறிப்பிட்ட ... புள்ளிக்குரிய உணவுப் பொ ... ருள்களை இது வரை பெ ... றாதோர் இம் மாதம் ஏழா ... ம் திகதி வரை நிவாரணத் ... தைப் பெற்றுக் கொள்ளலாம் ... என்று யாழ்ப் பாணம் பிரதே ... தச செயலாளர் அறிவித்துள்ள ... ார்.

(அ)

### படைக்கும் ...

(1 ஆம் பக்கத் ... தொடர்ச்சி)

தனர் என்ப ... தயும் —

அரச பாது ... காப்பு வட்டா ரங்கள் செய்தி ... ஏஜென்சிகளி டம் ஒப்புக்கொ ... ண்டன.

ஆனால் யு ... த்தச் செய்தி களுக்கு கொழு ... ம்பில் செய்தித் தணிக்கை விதி ... க்கப்பட்டிருப்ப தால், அரச ப ... டைகளுக்கு ஏற் பட்ட பேரிழப் ... புப் பற்றிய முழு விவரமும் ... வெளியாகா மல் இருப்பதா ... கக் கருதப்படு கின்றது.

(உ-3-15)

### வலி. கிழக்கில்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீரச்சாவடைந்ததாக ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

மண் மீட்புக்காக தம்முயிரைத் தியாகம் செய்த இந்த வேங்கைகள் பற்றிய முழுமையான விவரங்கள் இன்று வெளியாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

படையினரின் 'இடிமுழக்கத் தாக்குதல்'' நடவடிக்கை ஆரம்பித்து மூன்றாம் நாளான நேற்று அதிகாலை நவக்கிரி, நிலாவரைப் பகுதி ஊடாக அச்சுவேலி வரை ஊடறுத்து இராணுவத்தினரை நிலைகுலைய வைக்கும் இத்தாக்குதலை புலிகள் நடத்தியதாகத் தெரியவருகின்றது.

புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி, புத்தூர்மேற்கு பகுதிகளில் இத்தாக்குதல்கள் இடம்பெற்றன என்றும் —

புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி ஆகியவற்றுக்கும், புத்தூர்மேற்கு, ஆவரங்கால் ஆகியவற்றுக்கும் இடையே படையினரின் பாதுகாப்பு எல்லைகளை இரண்டு பெரும் குழுக்களாக புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தினர் என்றும்—

ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-15)

### வாகனம் ஒன்றில் அடைக்கப்பட்ட நிலையில்

# ஜேர்மனிக்குள் நுழைய முயன்ற 54 இலங்கைத் தமிழர் கைதாகினர்

பொன், ஒக். 4

காற்றோட்டம் இல்லாத வாகனம் ஒன்றில் நெருக்கமாக அடைத்து ஏற்றப்பட்ட நிலையில் ஜேர்மனிக்குள் சட்டவிரோதமாக கடத்தப்பட்ட 54 இலங்கைத் தமிழர்களை ஜேர்மன் பொலீஸார் மீட்டு கைது செய்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சிங்கப்பூரில் இருந்து இவர்கள் ஜேர்மனிக்கு அழைத்துச் செல்ல 8 ஆயிரம் அமெரிக்க டொலர் வீதம் பணம் பெறப்பட்டதாகவும் —

இவர்கள் சிங்கப்பூரில் இருந்து இத்தாலி, செக் குடியரசு ஊடாக கடத்தப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது,

வாகனம் ஒன்றை ஜேர்மன் பொலீஸார் சோதனை செய்த சமயமே இவர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

54 பேரில் இருவர் சிறுவர்களாவர்.

இந்தக் கடத்தல் தொடர்பான இலங்கை தமிழ் இளைஞன் ஒருவரும் மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த வாகன சாரதியும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜேர்மனியில் அகதி முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

[ஒ-3]

# நேற்று ஷெல்லுக்கு பலியான அறுவர்

நேற்று படையினர் நடத்திய கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலில் வலிகாமம் கிழக்கில் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்கள் ஆறு பேரினதும் விவரம் வருமாறு:-

★ சின்னத்தம்பி இராசையா [வயது 50] புத்தூர் கிழக்கைச் சேர்ந்த இவர் இடம்பெயர்ந்து இருபாலை மீனாட்சிஅம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள ஒரு வீடொன்றில் இருந்த சமயம் அங்கு விழுந்து வெடித்த ஷெல்லினால் தலை சிதறிப் பலியானார்.

கோப்பாய் இராச வீதிக்கு அண்மையில் காந்திபுரம் பகுதியில் விழுந்த ஷெல்லினால், பங்கரில் இருந்து வெளியேறி வேறு இடத்துக்கு ஓட முற்பட்ட இரு மாணவர்கள் உயிரிழந்தனர். அவர்களின் விவரம்:-

★ செல்வநாயகம் தசாந்தன் (வயது 9) — வயிற்றில் காயமடைந்தவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

★ செல்வம் றெஜினோல்ட் (வயது 12) — தலையிலும் முகத்திலும் ஏற்பட்ட காயங்களினால் வீட்டில் உயிரிழந்தார்.

நேற்றுக் காலை 6 மணிக்கு உரும்பராய் மத்தியில் வீழ்ந்த ஷெல்லினால் ஏழாலையில் இருந்து இடம்பெயர்ந்து அங்கு தங்கியிருந்த இருவர் மரணமானார்கள். அவர்களின் விவரம்:-

★ சுப்பிரமணியம் மாணிக்கம் [வயது- 40]

★ செல்லையா நடராசா [வயது - 60]

உரும்பராயில் விழுந்த மற்றொரு, ஷெல்லுக்கு கோக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒருவர் பலியானார். அவரின் பெயர் விவரம்:-

★ குணநாயகம் தேமுதரன் (வயது 23) — உரும்பராய்.

(உ-3-13-15-154)

# நேற்று காயமுற்ற 29 பேர்

யாழ்ப்பாணம், ஒக். 4

படையினர் நேற்று நடத்திய கண்மூடித்தனமான ஷெல் வீச்சில் காயமடைந்த 29 பேரின் விவரம் வருமாறு:-

நேற்று அதிகாலை 4-00 மணிக்கு இருபாலைப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் சகோதரிகள் இருவர் உட்பட ஐவர் காயமுற்றனர். அவர்களின் விவரம் வருமாறு;-

★ கிருஷ்ணசாமி வதனி [வயது 36)

★ கிருஷ்ணசாமி பவானி [வயது 21]

★ யோகநாதன் யசோதரன் [வயது 18)

★ இராசையா நித்தியானந்தன் (வயது 18]

★ மங்கையர்க்கரசி (வயது 39]

கோப்பாயில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் —

★ கந்தசாமி கலாநிதி [வயது 21]

★ நீசன் அமலதாஸ் ரஞ்சினி [வயது 25]

ஊரெழுவில் விழுந்த ஷெல்லினால்

★ விநாசித்தம்பி சுவாமிநாதன் (வயது 70]

★ சுவாமிநாதனின் மகன் துரைராஜா [வயது 52)

★ சிவமோகன் (வயது 15)

★ நல்லையா ராசன்(வயது 35)

இவர்கள் நால்வரும் பாதுகாப்புத் தேடி ஊரெழு அம்மன் கோயில் பகுதியில் மரம் ஒன்றின் கீழ் நின்ற சமயம் அடுத்தடுத்து விழுந்தஇரண்டு ஷெல்களினால் காயமுற்றனர்,

காலை 6 மணிக்கு உரும்பராய்ப் பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் —

★ தம்பையா யோகநாதன் (வயது 50)

★ ரி. ராசரட்ணம் [வயது 72] — இவரது இரு கைகளும் ...

★ இளையதம்பிதம்பிராசா [வயது 55)

★ கே. கனகசுந்தரம் (வயது 77)

★ என். நாகராசா [வயது 35)

★ நாகராசா விமலா(வயது 30]

★ ரி. ஸ்ரீமன் (வயது 15)

உரும்பராய் இந்துக் கல்லூரி ஒழுங்கையில் விழுந்த ஷெல்லினால் —

★ தம்பையா நாதன்

★ பெயர் தெரியவராத மற்றும் ஒருவர் நேற்றுக் காலை 8 மணிக்கு கோண்டாவில் பஸ் டிப்போ பகுதியில் இடம்பெற்றஷெல் வீச்சில் —

★ சண்முகம் சர்வானந்தன் (வயது 23]

★ துரைசிங்கம் கரன் (வயது 19]

நீர்வேலி இராச வீதியில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் —

★ வி. வேலாயுதபிள்ளை (வயது 54)

இவர்களைத் தவிர —

★ ரஞ்சனி தாஸ் ரஜீதா [ஒன்றரை வயது] — உரும்பராய்.

★ கனகராசா மோகனந்தம் [வயது 50]

★ தங்கராசா [வயது 52] — ஊரெழு

★ என். வள்ளிநாயகி [வயது 54) — நீர்வேலி

— ஆகியோரும் காயமுற்றனர். இவர்கள் அனைவரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

புத்தூர் கிழக்கில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு முன்னால் மரத்தின் கீழ் படுத்திருந்த சகோதரர்கள் இருவர் அடுத்தடுத்து விழுந்த ஷெல்களினால் காயமுற்றனர். அவர்கள் இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:—

★ சின்னவன் மாணிக்கம் (வயது 55)

★ சின்னவன் செல்லன் (வயது 49)

(உ-3-13-15-117-154)

### பருத்தித்துறையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஷெல் வீச்சு நடைபெறுவதை அறிந்து திடுக்கிட்டு எழுந்து வீட்டுக்குள் இருந்து வெளியேவர முற்பட்டபோது செல்லையா புண்ணியமூர்த்தி [70 வயது] உடல் சிதறிப் பலியானார். இவரின் சதைத் துண்டங்கள் சில மட்டுமே அங்கு மீட்கப்பட்டன.

இதே சம்பவத்தில் இவரது மகளும் கைம்பெண்ணுமான தனபாலசிங்கம் செல்வராணி [35 வயது] வயிறு பிளந்த நிலையில் மரணமானார்.

இவரது கணவர் கடந்த வருடம் காசநோயினால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தில் செல்வராணியின் பிள்ளைகளான தனபாலசிங்கம் சுபாஜினி [வயது 15] தனபாலசிங்கம் தீபன் [வயது 7] ஆகியோர் காயமடைந்தனர்.

தனபாலசிங்கம் தீபனின் வலது கை துண்டிக்கப்பட்டுள்ளது இவர்கள் வளவாயில் இருந்து இடம்பெயர்ந்தவர்களாவர்.

இதேவேளை துன்னாலை வடக்கில் விழுந்த ஷெல்லினால் பதுங்குகுழிக்குச் செல்ல ஆயத்தமாகியவேளையில் இரத்தினம் சரஸ்வதி (வயது 65) என்பவரும் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட தாக்குதலில் ஷெல்கள் பல பருத்தித்துறை, துன்னாலை கற்கோவளம் போன்ற பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் வீடுகள் சில சேதமடைந்தன.

துன்னாலை சகாயமாதா கோயிலுக்கு சமீபமாக உள்ள வீடொன்றில் விழுந்த ஷெல்லினால் இந்தக் கோயிலிலும், அண்மையில் உள்ள புலோலி மெ. மி. பாடசாலையிலும் இருந்த இடம்பெயர்ந்த மக்கள் பெரும் பதற்றத்துக்குள்ளாகினர். (ஒ-15-173]

### படையினரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேதமடைந்துள்ளன. பல பயன்தரு மரங்களும், உணவுப் பயிர்களும் நாசமாகின. பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

(உ-3-11-13-15-111-117 154]

### மட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத நிலையில் அதிரடிப் படையினர் தப்பி ஓடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் போராளி லெப்டினன்ட் காவலன் அல்லது பிரபா [சின்னத்தம்பி இராசநாயகம் — மட்டக்களப்பு) வீரச்சாவு அடைந்தார்.

[ஒ-௧-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை

பத்தமேனியைச் சேர்ந்த திருமதி ரோகிணி அம்மா செல்லத்துரை அவர்களைக் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தால் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறிவிக்கவும். [38830]

செ. தனபாலசிங்கம்
19, குமாரவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை துரைராஜா

[பரமு]

கல்வியங்காட்டைச் சேர்ந்தவரான கணபதிப்பிள்ளை துரைராஜா அவர்கள் 29 09.1995 அன்று கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவராசா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், சத்தியபாமாவின் அன்புச் சகோதரரும், சந்திராதேவி (கனடா), இந்திராதேவி (கனடா), தவநாதன் (கனடா), மகாதேவா ஆகியோரின் மைத்துனரும், பத்மலோஜினி, சிவலோஜினி (ஜேர்மனி), பரந்திலகா (கனடா), அருட்செல்வம் (கனடா), திருச்செல்வம் (கனடா), கலைச்செல்வி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மராஜா (தர்மா போட்டோ), தியாகராஜா (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), வசந்தாதேவி (வவுனியா), மதிமுகராஜா, மகேந்திரராஜா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், குணாளன் (கனடா), கௌசிகா, தர்சிகா, லக்சன் (ஜேர்மனி), பபிந்தன் (ஜேர்மனி), ருக்சன் (கனடா) சங்கீதன் (கனடா), பிரசாந்தன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சு. தர்மராஜா
(மருமகன்)
(தர்மா போட்டோ)

10, வாசிகசாலை வீதி,
கல்வியங்காடு.

[38833]

## திருமதி துரைராசா தங்கம்மா

(பூமணி)

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 1 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய தங்கம்மா (பூமணி 1-10-95 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற துரைராசாவின் (ஓவசியர்) மனைவியும், நாகலிங்கத்தின் மகளும், கமலாதேவி, காலஞ்சென்ற நடேசபிள்ளை (பாடசாலை), ஸ்ரீரங்கநாயகி, வசந்தநாயகி (அவுஸ்திரேலியா), றபேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவலோகசுந்தரம் (தபால் திணைக்களம்) விக்கினேஸ்வரி, சிவநாதன் (இலங்கை வங்கி), சந்திரகரன் (அவுஸ்திரேலியா), உஷா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 4 - 10 - 95 புதன்கிழமை காலை 10 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி. எஸ். ஸ்ரீரங்கநாயகி [மகள்]
றபேசன் (மகன்)

இல 5,
1 ஆம், குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[சி/1737]

## செல்லையா நடராசா

ஏழாலை வடக்கைச் சேர்ந்த செல்லையா நடராசா நேற்று உரும்பிராயில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும், சின்னத்துரை பாக்கியம், காலஞ்சென்ற சின்னத்துரை இராசம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று உரும்பிராயில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. செல்வராசா
(மருமகன்)

[38837]

## மாணிக்கம் சுப்பிரமணியம்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த மாணிக்கம் சுப்பிரமணியம் நேற்று உரும்பராயில் அகால மரணமானார்.

இவர் மாணிக்கம் சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், தாரணி, பதனந்தன் (சுவிஸ்), ஜலகீரீபன், ஜலதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருக்குமரனின் (டிஸ்கோ — போராளி) மாமனாரும், தமிழினியின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று உரும்பராயில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

[38836]

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் பரமானந்தம்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 3ஆம் வட்டாரம் வீரம் புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பரமானந்தம் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் வெங்கமிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு (விசுவாமித்திரர்) தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், நாயகப்பிள்ளையின் அன்புக் கணவரும், யோகேஸ்வரி, சிவானந்தன், காலஞ்சென்ற லோகநாயகி மற்றும் மனோன்மணி, நித்தியானந்தன் (உரும்பிராய்), தயானந்தன் (புங்குடுதீவு - நயினாதீவு பல நோ. கூ. சங்கம்), சிறியானந்தன் (கொழும்பு), குகனேஸ்வரி (ஜேர்மனி), சதானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தவராசா, வசந்தராணி, மதிரஞ்சனா, புஷ்பராணி, சண்முகநாதன் (ஜேர்மனி), மலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக வளாக வீதி (டயஸ் வீதி), திருநெல்வேலியில் இருந்து கோக்குவில் இந்து மயானத்திற்கு இன்று மதியம் 12-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ப. நித்தியானந்தன
ப. தயானந்தன்
(பிள்ளைகள்)

[38841]

## திருமதி விசாலாட்சி அப்பாக்குட்டி

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது யாழ். பொம்மைவெளி செழியன் வீதியில் வசித்தவருமான விசாலாட்சி 3. 10. 1995இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அப்பாக்குட்டியின் அன்பு மனைவியும், பரஞ்சோதி, தங்கத்துரை, ஆலாலசுந்தரம், காலஞ்சென்ற மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரி, தவமணி சுந்தராம்பாள், சின்னத்துரை ஆகியோரின் அன்பு மாமியாரும் ரவி, நடேஸ், வனிதா, சுதாசினி (மாவீரர்), சுதாகரன், சுரேஸ்கரன், சுதர்சன், சுதர்சினி, சுபேந்திரன், சுகந்தன், பிரதீபன் (போராளி), ஜெகதீபன், சங்கீதா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான சடாசிவம், கந்தையா, முத்துக்குமார், லெச்சுமி, மீனாட்சி, மற்றும் சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (4. 10. 1995) முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. நடேசலிங்கம்
(பேரன்)

செழியன் வீதி,
பொம்மைவெளி,
யாழ்ப்பாணம். (38840)

# வெதுப்பக உரிமையாளர்களுக்கு அன்பான வேண்டுகோள்

களஞ்சியத்திலிருந்து எமது சங்கத்திற்கு வழங்கப்படும் மாவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால், மக்கள் நலன் கருதி தங்களுக்கு விநியோகிக்கப்படும் முழு மாவினையும் வெதுப்பி உற்பத்திக்கு மாத்திரமே பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

ஸ்பெசல் வெதுப்பி, இனிப்பு வெதுப்பி, பணிஸ், கேக் வகைகள் (அலட கேக் உட்பட) கப்பணிஸ் மற்றும் இதுபோன்ற ஆடம்பர உணவுப் பொருட்களின் உற்பத்தியை இன்று (04-10-1995) புதன்கிழமையிலிருந்து. மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எக்காரணம் கொண்டும் வெதுப்பியின் நிர்ணயிக்கப்பட்ட நிறை, விலை தரம் ஆகியவற்றில் மாற்றம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

தலைவர்,
யாழ். மாவட்ட வெதுப்பக
உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி/2410)

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் குணநாயகம் தேமதுரன்

(ஹரணி)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் கு தேமதுரன் (ஹரணி, மாணவன் தொழில் நுட்பக் கல்லூரி H. N D C 2 ஆம் வருடம்) நேற்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணநாயகம் (இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் பொறுப்பதிகாரி) தில்லைநாயகி தம்பதிகளின் புதல்வனும், கோசலை (ஆசிரியை யாழ் விநாயகர் வேலுப்பிள்ளை மகா வித்தியாலயம்), மனோராகவன் (Holland) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (4-10-95) முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. தில்லைநாயகி
(தாய்)

(38838)

## திருமதி மகேஸ்வரி அம்மா சின்னத்தம்பு

(அராலி கிழக்கு)

அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி அம்மா சின்னத்தம்பு, 29 - 09 - 1995 இல் சிவபதம் அடைந்தார் அன்னார் காலஞ்சென்ற M. K. சின்னத்தம்புவின் அன்பு மனைவியும், இந்திராணி, செல்வராணி, சிவசுப்பிரமணியம் (அசோகா) கிருஷ்ண மூர்த்தி, தமயந்தி, காலஞ்சென்ற சிவலிங்கம், கோசலை ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன், யோகலிங்கம், சுசீலாமதேவி, அஜித் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 01 - 10 - 1995 அன்று காலை 11 மணிக்கு நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அசோகா [மகன்]

இனிஷ்பம் றோட்,
தெகிவளை

(38822)

## சீனிவாசகம் இராமநாதன்

(வர்த்தகர் கிக்கடுவ)

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் இராமநாதன் நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் நல்லையா, கைலாசபிள்ளை, பாலசுப்பிரமணியம், யோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி, சிவபாக்கியநாம்பாள், கலா, ரஞ்சித கௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேஸ்குமார், நீபகலா, ரெஜிகேஷன், தர்ஷா, சகானா, பானுஷா, ரேணுகா, தயாளினி தர்மிளா, செந்தூரன், நேருஜா, சரண்ஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04 - 10 - 95) காலை 10-00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
இ. யோகநாதன்.

பொற்பதி வீதி,
கொக்குவில்.

[38820]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org